CC.No. 166/2019 Date: 08.04.2026

Page No.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

அ.சா. 1 திரு. ரங்கசாமி த /பெ. ரத்தினவேல், வயது. 80.

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை (1 முதல் 4 வரையிலான எதிரிகள் ஆஜர்)**

எதிரிகள் எனக்கு உறவினர் முறை என்றால் சரியல்ல. எதிரிகள் வீடு எனது பக்கத்து வீடு என்றாலும் அவர்களின் வீட்டு எண். 545 என்றால் அவர்கள் அதை போலீயாக வாங்கியுள்ளார்கள். நான் நிதிமன்றத்தில் புகார் அளித்தேனா என்றால் இல்லை. சாட்சி பின்னர் ஞயாபகமில்லை என்று பதிலளிக்கிறார். சென்னப்பனின் ஊர் எனது ஊரில் இருந்து 1 கிமீ தூரம் தள்ளி உள்ளது என்றால் சரிதான். காவல் துறையினரிடம் உரிமையில் வழக்கு சம்மந்தமாக விசாரிணையின்போது நான் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த தனி புகாரில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் ஆங்கிலத்தில் உள்ளதால் எனக்கு தெரியவில்லை. ஞாயாபகமுமில்லை. காவல் நிலையத்திற்கு சென்று புகார் அளித்த பின்னர் தான் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரிதான். மருத்துமனையிலும் காவல் துறையினர் விசாரித்தார்கள். சம்பவிடத்தை காவல் துறையினருக்கு யார் காண்பித்தார்கள் என்றால் சென்னப்பன் மற்றும் நானும் அடையாளம் காட்டினோம். 2ம் எதிரி எனக்கு நெருங்கிய உறவினர் என்பதால் அவர் வீட்டின் அருகில் நான் இருப்பதற்கு அளித்த இடம் சம்மந்தமாக ஏற்பட்ட பிரச்சனையின் காரணமாக நடக்காத சம்பவத்திற்காக எதிரிகளின் மீது பொய்யான புகார் அளித்து, பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் நான் சரியாக பதிலளிக்காததால் நான் தான் தேவையற்ற முறையில் எதிரிகளிடம் பிரச்சனை செய்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –** இல்லை

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Signature of Witness

Judicial Magistrate No.III(FAC)
Tirupathur.